# பொறியாளர்களின் ஊதிய வழக்கு தொடர்பான விரிவான அறிக்கை

**அன்பான பொறியாளர் நண்பர்களே,**

வணக்கம். சனவரி 2015 சங்க இதழில் உச்சநீதிமன்றத்தில் நடைபெற்று வரும் பொறியாளர்களுக்கான ஊதிய வழக்கின் நிலைப்பாட்டினை தெளிவாக விளக்கி இருந்தோம். இது தொடர்பாக பெரும்பாலான உறுப்பினர்கள் விரிவான விளக்கம் தரும்படி கோரியிருந்தார்கள். ஆகவே இந்த இதழ் வாயிலாக பொறியாளர்களுக்கான ஊதியம் தொடர்பான விரிவான அறிக்கை அனுப்பப்படுகிறது.

5வது ஊதிய குழுவின் பரிந்துரையின் படி தமிழகத்தில் உள்ள பொறியார்களுக்கான ஊதிய விகிதம் கீழ்கண்டவாறு நிர்ணயம் செய்யப்பட்டு 1996ம் ஆண்டு முதல் அமுல்படுத்துவதற்கான அரசாணை 1998ம் ஆண்டில் பிறப்பிக்கப்பட்டது.

1. உதவிப் பொறியாளர் : 6500– 11100
2. உதவிக் கோட்டப் பொறியாளர் : 8000–13500
3. கோட்டப் பொறியாளர் : 10000–15100

6வது ஊதிய குழுவின் பரிந்துரையின் படி தமிழகத்தில் உள்ள பொறியார்களுக்கான ஊதிய விகிதம் கீழ்கண்டவாறு நிர்ணயம் செய்யப்பட்டு 2006ம் ஆண்டு முதல் அமுல்படுத்துவதற்கான அரசாணை 2009ம் ஆண்டில் பிறப்பிக்கப்பட்டது.

1. உதவிப் பொறியாளர் : 9300–34800 + தரஊதியம் 4700
2. உதவிக் கோட்டப் பொறியாளர் : 15600 – 39100 + தரஊதியம் 5400
3. கோட்டப் பொறியாளர் : 15600 – 39100 + தரஊதியம் 6600

தமிழ்நாடு நெடுஞ்சாலை பொறியாளர்கள் சங்கம் மற்றும் அனைத்து துறைகளின் பொறியாளர் சங்கங்களின் தீவிர முயற்சியால் தமிழக அரசால் அமைக்கப்பட்ட ஒரு நபர் குழு (one man commission) பொறியாளர்களுக்கான ஊதிய விகிதத்தை கீழ்கண்டவாறு நிர்ணயம் செய்ய பரிந்துரை செய்து, தமிழக அரசு அதனை ஏற்று ஊதிய விகிதத்தில் திருத்தம் செய்து அதற்கான உத்தரவை 28.08.2010 அன்று பிறப்பித்தது.

1. உதவிப் பொறியாளர் : 15600–39100 + தரஊதியம் 5400
2. உதவிக் கோட்டப் பொறியாளர் : 15600 – 39100 + தரஊதியம் 6600
3. கோட்டப் பொறியாளர் : 15600 – 39100 + தரஊதியம் 7600

தமிழக அரசானது எந்தவிதமான முன்னறிவிப்புமின்றி, அரசாணை எண். 71, நாள் 26.02.2011 வாயிலாக பொறியாளர்களின் ஊதிய விகிதத்தை கீழ்கண்டவாறு மாற்றம் செய்து (குறைத்து) உத்தரவு பிறப்பித்தது

1. உதவிப் பொறியாளர் : 15600–39100 + தரஊதியம் 5100
2. உதவிக் கோட்டப் பொறியாளர் : 15600 – 39100 + தரஊதியம் 5400
3. கோட்டப் பொறியாளர் : 15600 – 39100 + தரஊதியம் 6600

இந்த அரசாணை பிறப்பித்த உடனேயே நெடுஞ்சாலைத்துறை பொறியாளர் சங்கம், தனிநபர்கள் மற்றும் பிற பொறியாளர் சங்கங்களும் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து **அரசாணை எண். 71, நாள் 26.02.2011 க்கு தடை உத்தரவு 18.03.2011 அன்று பெறப்பட்டது. தடை உத்தரவு பெறப்பட்ட காரணத்தினால், பொறியாளர்களுக்கான ஊதியம் குறைக்கப்படவில்லை.** இந்த ஊதிய விகிதம் தொடர்பான அனைத்து வழக்குகளையும் சென்னை உயர்நீதிமன்றம் 08.03.2012 அன்று Pay Grievance Redressal Cell ஐ தமிழக அரசு நான்கு வாரங்களுக்குள் அமைத்து அனைத்து தரப்பினரிடமிருந்து குறைகளை கேட்டறிந்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு உத்தரவிட்டு வழக்க தள்ளுபடி செய்தது.

**இந்த உத்தரவை எதிர்த்து நமது சங்கம் சென்னை உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்து 27.03.2012 அன்று தடை உத்தரவு பெற்றது (Pay Grievance Redressal Cell அமைப்பது நீங்கலாக). இத்தடை உத்தரவு பெறப்பட்ட காரணத்தினால் பொறியாளர்களுக்கான ஊதியம் குறைக்கப்பட வில்லை.** தமிழக அரசு 10.04.2012 அரசாணையின் வாயிலாக கீழ்காணும் அலுவர்களைக் கொண்டு Pay Grievance Redressal Cell ஐ நியமணம் செய்தது:

1. Thiru. S. Krishanan, I.A.S.,
   Secretary (Expenditure)……………………..as………… Chairman
2. Thiru. M. Padmanaban.
   Additional Secretary to Government …..as…………… Member and
3. Dr. P. Umanath, I.A.S.,
   Joint Secretary to Government………..as………..Member

திரு. M. பத்மநாபன் அவர்கள் ஓய்வு பெற்றததை தொடர்ந்து திருமதி. M. சாந்தி, அரசு கூடுதல் செயலாளர், நிதித்துறை இக்குழுவில் உறுப்பினராக நியமணம் செய்யப்பட்டார். இக்குழுவானது அனைவரிடமும் குறைகளை கேட்டறிந்து பொறியாளர்களுக்கான ஊதிய

விகிதத்தை கீழ்காணுமாறு குறைத்து அரசுக்கு பரிந்துரை செய்து தமிழக அரசானது அதற்கான உத்தரவை அரசாணை எண். 242, நாள் 22.07.2013 வாயிலாக உத்தரவிட்டது:

| | | |
|---|---|---|
| 1. உதவிப் பொறியாளர் | : | 9300–34800 + தரஊதியம் 5100 |
| 2. உதவிக் கோட்டப் பொறியாளர் | : | 15600 – 39100 + தரஊதியம் 5400 |
| 3. கோட்டப் பொறியாளர் | : | 15600 – 39100 + தரஊதியம் 6600 |

நமது சங்கம் மற்றும் பிற சங்கங்கள் உடனடியாக சென்னை உயர்நீதிமன்றத்தில் இந்த அரசாணயை செயல்படுத்த கூடாது என வழக்கு தொடரப்பட்டது.

**மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில், நீதியரசர்கள் மாண்புமிகு நீதியரசர் உயர்திரு. பால் வசந்தகுமார் மற்றும் மாண்புமிகு நீதியரசர் உயர்திரு. தேவதாஸ் ஆகியோர்கள் அடங்கிய அமர்வு குழு (Bench) 27.02.2014 அன்று கீழ்காணும் தீர்ப்பு வழங்கியது:**

1. **அரசானது மாண்புமிகு ஓய்வு பெற்ற சத்தீஸ்கர் உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி உயர்திரு ஏ.எஸ். வெங்கடாசலமூர்த்தி தலைமையில் ஒரு Pay Grievance Redressal Cell ஐ நியமித்து** அதில் ஒன்று அல்லது இரண்டு Senior level I.A.S, அதிகாரிகளை உறுப்பினர்களாக நியமிக்கலாம். இந்த உத்தரவு கிடைக்கப் பெற்ற மூன்று வாரங்களுக்குள் இந்த குழு அமைக்கப்பட வேண்டும்.
2. **புதிய முடிவு எடுக்கும் வரை அரசாணை எண். 71, நாள் 26.02.2011 மற்றும் அரசாணை எண் 242, நாள் 22.07.2013 ஆகிய இவ்விரு ஆணைகளையும் செயல்படுத்த கூடாது.**

**மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தின் 27.02.2014ல் வழங்கப்பட்ட தீர்ப்பை எதிர்த்து தமிழக அரசு மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்து (SLP no: 35679 to 35838 of 2014) இத்தீர்ப்புக்கு தடையாணை மற்றும் அரசாணை எண். 242, நாள். 22.07.2013 அமுல்படுத்த உத்தரவு வழங்குமாறு கோரப்பட்டது.**

இவ்வழக்கானது 16.01.2015 அன்று மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. **தமிழக அரசு சார்பில் மூத்த வழக்கறிஞர்களான திரு.முகுள் ரோட்டகி, மத்திய அரசின் தலைமை வழக்கறிஞர் (Attorney General of India) மற்றும் திரு. சுப்பிரமணியபிரசாத், தமிழக அரசின் கூடுதல் தலைமை வழக்கறிஞர் (Additional Advocate General of Tamil Nadu) ஆகியோர் ஆஜராகி இத்தீர்ப்புக்கு தடையாணை மற்றும் அரசாணை எண். 242, நாள். 22.07.2013 அமுல்படுத்த உத்தரவு வழங்குமாறு கோரினார்கள்.** பொதுப்பணித்துறை, குடிநீர் வடிகால் வாரியம், வேளாண்மை பொறியியல் துறை மற்றும் பிற துறைகள் அனைத்திற்கும் மூத்த வழக்கறிஞர் திரு.எ.எம். சிங்வி ஆஜரானார். **இவ்வழக்கின் தன்மை**

கருதி மேலும் தமிழக அரசின் சார்பில் இரண்டு மூத்த வழக்கறிஞர்கள் ஆஜராவதனால் , நமது சங்கம் மூத்த வழக்கறிஞர் **Dr.** ராஜீவ் தவான், அவர்களை நியமித்து பொறியாளர்களின் ஊதியம் தொடர்பான நிலையினை நீதியரசர்களுக்கு எடுத்துரைத்து வாதிட்டனர். ***இருதரப்பு வாதங்களையும் கேட்ட பின்னர் மாண்புமிகு நீதியரசர்கள் Pay Grievance Redressal Cell ஐ நியமிப்பதற்கு மட்டும் தடையாணை பிறப்பித்து உத்தரவிட்டனர்.*** மேலும் மாண்புமிகு நீதியரசர்கள் அனைவருக்கும் தாக்கீது அனுப்பவும் வழக்கினை உச்சநீதிமன்றத்தில் நடத்தவும் அனுமதி வழங்கி உத்தரவிட்டனர். ***ஆகையால் பொறியாளர்களுக்கான ஊதிய விகிதம் குறைக்கப்படவில்லை. நமது பொறியாளர் சங்கம் மற்றும் பிற சங்கங்களின் தீவிரமான முயற்சியால் உச்ச நீதிமன்றத்தில் திறம்பட வழக்கு நடத்தி தற்காலிகமான உத்தரவு பெறப்பட்டது.***

இந்த உத்தரவு தற்காலிகமானது. இதற்கான நிரந்தர தீர்வானது, இவ்வழக்கை உச்சநீதிமன்றத்தில் திறம்பட வாதிட்டு வழக்கை விரைந்து முடிக்கப்பட வேண்டும். அதன் பின்னரே நமது ஊதிய விகிதம் தொடர்பான முரண்பாடுகள் களையப்படும்.

1998ல் உதவிப் பொறியாளராக பணியில் சேர்ந்து 2011ல் உதவிக் கோட்டப் பொறியாளராக பதவி உயர்வு பெற்ற பொறியாளர் ஒருவரின் ஊதியம் மற்றும் 2012ல் உதவிப் பொறியாளராக பணியில் சேர்ந்த பொறியாளரின் ஊதியங்கள், ஒரு நபர் குழுவின் பரிந்துரையின் படி பெறப்படும் ஊதியம் மற்றும் அரசாணை எண் 242, நாள் 22.07.2013ன் படி திருத்தப்பட வேண்டிய ஊதியம் ஒப்பிடப்பட்டு கீழ்கண்டவாறு தெரிவிக்கப்படுகிறது:

i) 2012ல் உதவிப் பொறியாளராக பணியில் சேர்ந்த பொறியாளர் தற்பொழுது பெறப்படும் ஊதியம்

| வ. எண் | பொருள் | ஒரு நபர் குழுவின் பரிந்துரையின் படி தற்பொழுது பெறப்படும் ஊதியம் | அரசாணை எண் 242, நாள் 22.07.2013ன் படி ஊதியம் | மொத்த வித்தியாசம் |
|---|---|---|---|---|
| 1. | அடிப்படை ஊதியம் (BP) | 17,550 | 10,650 | 6,900 |
| 2. | தர ஊதியம் (GP) | 5,400 | 5,100 | 300 |
| 3 | அக விலைப்படி (107%) | 24,557 | 16,853 | 7704 |
| 4 | வீட்டு வாடகைப்படி (HRA) | 3,200 | 3,200 | – |
| 5 | நகர ஈடுசெய்ப்படி (CCA) | 600 | 600 | – |
| 6 | மருத்துவப்படி (MA) | 100 | 100 | – |
| | மொத்தம் | 51,407 | 36,503 | 14,904 |

ii) 1998ல் உதவிப் பொறியாளராக பணியில் சேர்ந்து 2011ல் உதவிக் கோட்டப் பொறியாளராக பதவி உயர்வு பெற்ற பொறியாளர் தற்பொழுது பெறப்படும் ஊதியம்.

| வ. எண் | பொருள் | ஒரு நபர் குழுவின் பரிந்துரையின் படி தற்பொழுது பெறப்படும் ஊதியம் | அரசாணை எண் 242, 22.07.2013ன் நாள் படி ஊதியம் | மொத்த வித்தியாசம் |
|---|---|---|---|---|
| 1. | அடிப்படை ஊதியம் (BP) | 28,540 | 24,180 | 4,360 |
| 2. | தர ஊதியம் (GP) | 6,600 | 5,400 | 1,200 |
| 3 | அக விலைப்படி (107%) | 37,600 | 31,651 | 5,949 |
| 4 | வீட்டு வாடகைப்படி (HRA) | 3,200 | 3,200 | – |
| 5 | நகர ஈடுசெய்ப்படி (CCA) | 600 | 600 | – |
| 6 | மருத்துவப்படி (MA) | 100 | 100 | – |
| | மொத்தம் | 76640 | 65,131 | 11,509 |

**அரசாணை எண் 242, நாள் 22.07.2013ன் படி ஊதிய விகிதம் திருத்தப்பட்டால் உதவிப் பொறியாளர் பெற்றுக் கொண்டிருக்கும் ஊதியத்தில் சுமார் ரூ.15,000 மற்றும் உதவிக் கோட்டப் பொறியாளரின் ஊதியத்தில் சுமார் ரூ.12,000 குறைய வாய்ப்புள்ளது.** இந்த முரண்பாடுகளை களைய ஒரே வழி உச்ச நீதிமன்றத்தில் வழக்கை திறமையான மூத்த வழக்கறிஞர்களை கொண்டு வாதிட்டு வெற்றிகான வேண்டும்.

16.01.2015 அன்று நமது சங்கம் சார்பில் ஆஜராகி வாதிட்டதற்காக நமது சங்கத்தின் சார்பாக அதிக செலவுகள் சங்க வழக்கு நிதியிலிருந்து வழக்கிற்காக செலவிடப்பட்டது. மேலும் இவ்வழக்கை உச்சநீதிமன்றத்தில் உள்ள திறமையான மூத்த வழக்கறிஞர்களை கொண்டு தொடர்ந்து நடத்திட அதிக நிதி உதவி தேவைப்படுகிறது. உச்சநீதிமன்றத்தில் உள்ள திறமையான மூத்த வழக்கறிஞர்களைக் கொண்டு வாதிட்டால் மட்டுமே வழக்கை சிறப்பாக முடிக்க முடியும்.

ஆகவே, அனைத்து பொறியாளர் நண்பர்களும் தங்களது சொந்த ஊதிய பிரச்சனைக்காக அதிகமான அளவில் வழக்கு நிதி வழங்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

தலைவர் பொது செயலாளர்